an International CBSE Finger Print School
Coimbatore

# இயல் 9.2 - புதுவை வளர்த்த தமிழ்

GRADE- V

QUESTION BANK

## அ) வினாக்களுக்கு விடையளி.

**1. பாரதியார் படைத்த முப்பெருங் காவியங்கள் யாவை?**

பாஞ்சாலி சபதம், குயில் பாட்டு, கண்ணன் பாட்டு ஆகிய முப்பெருங் காவியங்களைப் பாரதியார் படைத்தளித்தார்.

**2. பாரதிதாசன் - பெயர்க் காரணம் தருக.**

பாரதியார் மீது அன்பும் பாசமும், பற்றும் உடையவர். அதனால்தான், தன் பெயரைப் பாரதிதாசன் என்று மாற்றியமைத்துக்கொண்டார்.

**3. தமிழின் வளர்ச்சிக்குக் கவிஞர்கள் எவ்வாறெல்லாம் தொண்டாற்றியுள்ளனர்?**

- ✓ தமிழில் பல கவிதை நூல்களைப் படைத்துள்ளனர்.
- ✓ நாடகங்கள் பல படைத்து நாடகத்தமிழை வளர்த்தனர்.
- ✓ மக்களுக்கு விழுமியத்தையும், விழிப்புணர்வையும் தங்கள் கவிதைகள் மூலம் வளர்த்தனர்.
- ✓ விடுதலை போராட்டத்திலும், மக்களைத் தம் பாடல்கள் மூலம் கலந்திட அழைத்தனர்.
- ✓ இன்றும் சமுதாய மாற்றத்திற்கு பல கவிஞர்கள் தம் பாடல்களால் விழிப்புணர்வை ஏற்படுத்துகின்றனர்.

**4. புதுவைக்கு புகழ் சேர்த்த கவிஞர்களைக் குறிப்பிடுக.**

**பாரதிதாசன் படைப்புகள் யாவை?**

- **புதுவைக்கு புகழ் சேர்த்த கவிஞர்கள்:**

பாரதிதாசன், வாணிதாசன், புதுவை சிவம், தமிழ் ஒளி, இரா.திருமுருகன், பிரபஞ்சன்

- **பாரதிதாசனின் படைப்புகள் :**

அழகின் சிரிப்பு, பாண்டியன் பரிசு, தமிழியக்கம், குறிஞ்சித்திட்டு, புரட்சிக்கவி, இசையமுது மற்றும் பிசிராந்தையார் என்ற நூலையும் படைத்துள்ளார்.